தொடர்பான மீள் கொள்வனவுகள், வட்டியும் பணிக்கொடுப்பனவுகளும் என்பன முறையே ரூ. 5,930 இலட்சம் (சிஎஉ 230 இலட்சம்) ரூ. 8,190 இலட்சமாக (சிஎஉ 310 இலட்சம்) விளங்கின. 1983 இன் இது தொடர்பான எண் தொகைகள் முறையே ரூ. 10,970 இலட்சமாகவும் (சிஎஉ 460 இலட்சம்) ரூ. 7,490 இலட்சமாகவும் (சிஎஉ 310 இலட்சம்) விளங்கின. சிஎஉ நியதிகளில் பொருட்கள்; பணிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களுக்கும் மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுக்குமிடையிலான விகிதம் 1983 இன் 21.9 சதவீதத்திலிருந்து 1984 இல் 17.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இந்தக் குறைப்புக்கு ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முதன்மைக் காரணியாயிருந்தது. பன்னாட்டு நாணய நிதியக் கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த படுகடன் பணிவிகிதம் 1983 இன் 16.0 சதவீதத்திலிருந்து 1984 இல் 14.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வணிக ஏற்றுமதிகள், பணிகள், மற்றும் தனியார் மாற்றல்களில் இருந்தான பெறுகைகளின் விகிதமாக, முழு மொத்த படுகடன் பணிக் கொடுப்பனவுகள், 1983 இற்கும் 1984 இற்கும் இடையில் 18.1 சதவீதத்திலிருந்து 14.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது.

## அரசின் இறைத் தொழிற்பாடுகள்*

அரசின் இறைத் தொழிற்பாடுகள் 1984 இன் வரவு செலவுத் திட்டக் குறையினைக் கணிசமான அளவு குறைவடையச் செய்து வங்கித்தொழில் அமைப்பிற்குப் பெருமளவான கடனை மீளச் செலுத்த வழிவகுத்தது. வரவுசெலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கு மிகையினை ஏற்படுத்தி மூலதனச் செலவுக்கான மூலவளத்தில் ஒரு பகுதியினை வழங்கியது. எனவே வரவு செலவுத் திட்டக் கடன்பாடுகள் மூலதனச் செலவினை நிதியிடுவதற்கு வேண்டிய மூலவளத்தின் பற்றுக்குறையின் அளவுக்கு மட்டும் தனியே மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

### இறைவெளிப்பாடு

முற்பணக்கணக்குகளின் தேறிய வெளிக் கொடுப்பனவையும் உள்ளடக்கிய மொத்த அரசின் செலவு ரூ. 535,930 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினை விட 14 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.செலவின் வளர்ச்சி 10 சதவீதப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தமையினால் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்பான செலவின் விகிதாசாரம் 38 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த அரசிறை ரூ. 377,310 இலட்சமாக அமைந்து 1983 இனைவிட 50 சதவீதமான அதிகரிப்பைக் காட்டியதுடன் நடைமுறைக் கணக்கு மிகைக்கு ரூ. 58,880 இலட்சத்தினை வழங்கியது. மீண்டெழும் செலவு ரூ. 289,260 இலட்சமாக அமைந்து 21 சதவீத அதிகரிப்பைக் காட்டியவேளையில் முற்பணக் கணக்குகள் மீதான தேறிய வெளிக் கொடுப்பனவுகள் ரூ. 29,170 இலட்சமாக அமைந்து 1983 இனைவிட ஏறக்குறைய மும்மடங்கு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மொத்த மூலதனச் செலவு சிறிதளவினால் அதிகரித்து ரூ. 217,500 இலட்சமாக விளங்கியது. இது முந்திய ஆண்டின் 16 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது. வரவுசெலவுத் திட்டக்குறை ரூ. 158,620 இலட்சமாக அமைந்து 27 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் வரவு செலவுத்திட்டக் குறை 18 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

---

* அரசின் கணக்குகளின் முற்றுப்படுத்தலில் தங்கியிருக்கும் தற்காலிகத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

## அட்டவணை 1.42

## அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு 1981–1984 (அ)

ப.இ. ரூபாய்களில் (மொஉஉ விகிதாசாரங்கள் அடைப்புக் கோட்டினுள்)

| | விடயம் | 1981 | 1982 | 1983 தற்காலிகம் | 1984 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1984 தற்காலிகம்* |
|---|---|---|---|---|---|---|
| 1. | அரசிறை ... ... | 16,228<br>(19.1) | 17,809<br>(17.9) | 25,210<br>(20.7) | 30,770 | 37,731<br>(24.9) |
| 2. | செலவு ... ... | 31,094<br>(36.6) | 37,900<br>(38.0) | 46,816<br>(38.5) | 47,313(ஆ) | 53,593<br>(35.4) |
| 2.1 | மீண்டெழும் செலவு | 16,005<br>(18.8) | 20,110<br>(20.2) | 23,963<br>(19.7) | 28,077 | 28,926<br>(19.1) |
| 2.2 | **கூட்டுக:** முற்பணக் கணக்குகள் ... ... | 1,716<br>(2.0) | – 879<br>(–0.9) | 1,120<br>(0.9) | 300 | 2,917<br>(1.9) |
| | | 17,721<br>(20.8) | 19,231<br>(19.3) | 25,083<br>(20.6) | 28,377 | 31,843<br>(21.0) |
| | நடைமுறைக் கணக்கு மிகை(+) குறை (–)... ... | – 1,493<br>(–1.8) | – 1,422<br>(–1.4) | + 127<br>(0.1) | + 2,393 | + 5,888<br>(3.9) |
| 2.3 | மூலதனச் செலவு ... ... | 13,373<br>(15.7) | 18,669<br>(18.7) | 21,733<br>(17.9) | 18,936 | 21,750<br>(14.4) |
| 3. | வரவு செலவுத் திட்டக்குறை ... ... | 14,866<br>(17.5) | 20,091<br>(20.1) | 21,606<br>(17.8) | 16,543 | 15,862<br>(10.5) |
| 4. | படுகடன் மீளக் கொடுப்பனவுகள் (இ) ... .. | 1,608<br>(1.9) | 2,612<br>(2.6) | 5,302<br>(4.4) | 2,368(ஈ) | 2,229<br>(1.5) |
| 5. | தேறிய பணக்குறை ... .. | 13,258<br>(15.6) | 17,479<br>(17.5) | 16,580<br>(13.6) | 14,175 | 13,633<br>(9.0) |
| 6. | வரவு செலவுத்திட்ட குறையை நிதியிடல் | | | | | |
| 6.1 | உள்நாட்டு சந்தையல்லாக் கடன்பாடு ... .. | 400<br>(0.5) | 1,713<br>(1.7) | 2,385<br>(2.0) | — | 9,16<br>(0.6) |
| 6.2 | உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு ... .. | 6,296<br>(7.4) | 9,899<br>(9.9) | 8,965<br>(7.4) | 4,231 | 3,041<br>(2.0) |
| 6.2.1 | வங்கி ... .. | 3,917(உ)<br>(4.6) | 4,006(உ)<br>(4.0) | 1,202(உ)<br>(1.0) | 681 | – 2,644<br>(–1.7) |
| 6.2.2 | வங்கியல்லா ... .. | 2,379<br>(2.8) | 5,894<br>(5.9) | 7,762<br>(6.4) | 3,550 | 5,685<br>(3.7) |
| 6.3 | வெளிநாட்டு நிதி ... .. | 8,208<br>(9.7) | 8,794<br>(8.8) | 10,950<br>(9.0) | 12,312 | 11,226<br>(7.4) |
| 6.3.1 | கடன்கள் ... .. | 5,487<br>(6.5) | 5,418<br>(5.4) | 7,477<br>(6.1) | | 7,957<br>(5.2) |
| 6.3.2 | நன்கொடைகள் ... .. | 2,721<br>(3.2) | 3,376<br>(3.4) | 3,473<br>(2.9) | | 3,269<br>(2.2) |
| 6.4 | பண நிலுவைகளின் பயன்பாடு ... .. | – 38<br>(...) | – 315<br>(–0.3) | – 694<br>(–0.6) | — | 679<br>(0.4) |
| 7. | தேறிய பணக்குறையை நிதியிடல் | | | | | |
| 7.1 | உள்நாட்டு சந்தையல்லாக் கடன்பாடு | 363<br>(0.4) | 1,664<br>(1.7) | 2,239<br>(1.8) | — | 820<br>(0.5) |
| 7.2 | உள்நாட்டு சந்தைக் கடன்பாடு | 5,331<br>(6.3) | 8,010<br>(8.0) | 5,250<br>(4.3) | 3,522 | 2,374<br>(1.6) |
| 7.2.1 | வங்கி | 3,885<br>(4.6) | 3,990<br>(4.0) | 1,168<br>(1.0) | 681 | – 2,760(ஈ)<br>(–1.8) |
| 7.2.2 | வங்கியல்லா | 1,446<br>(1.7) | 4,020<br>(4.0) | 4,082<br>(3.3) | 2,841 | 5,134<br>(3.4) |
| 7.3 | வெளிநாட்டு நிதி | 7,602<br>(8.9) | 8,120<br>(8.1) | 9,785<br>(8.0) | 10,653 | 9,761<br>(6.4) |
| 7.3.1 | கடன்கள் | 4,880<br>(5.7) | 4,744<br>(4.7) | 6,313<br>(5.2) | | 6,492<br>(4.2) |
| 7.3.2 | நன்கொடைகள் | 2,721<br>(3.2) | 3,376<br>(3.4) | 3,472<br>(2.8) | | 3,269<br>(2.2) |
| 7.4 | பண நிலுவைகளின் பயன்பாடு | – 38<br>(...) | – 315<br>(–0.3) | – 694<br>(–0.6) | — | 679<br>(0.4) |
| 8. | இறைத் தொழிற்பாட்டின் விரிவுத் தாக்கம்... | 3,847<br>(4.5) | 3,675<br>(3.7) | 474<br>(0.4) | 681 | – 2,082<br>(–1.4) |
| 9. | வெளிநின்ற (தேறிய) பொதுப்படு கடன் ... ... | 58,659<br>(69.0) | 71,250<br>(71.4) | 86,423<br>(71.0) | — | 95,741<br>(63.2) |

மூலங்கள்: திறைசேரி, இலங்கை மத்திய வங்கி.

(அ) பின்னிணைப்பின் அட்டவணை 31 இற்குத் தரப்பட்டுள்ள அடிக்குறிப்புகளின் காரணங்களுக்கேற்ப இவ்வெண் தொகைகள் அரச கணக்கில் தரப்பட்டவையினின்றும் வேறுபடும்.

(ஆ) குறைச் செலவிற்கான சீராக்கங்களுடன்.

(இ) கடன்கரைப்பு நிதிய உதவுதொகைகள். பொதுப்படுகடனின் நேரடி மீளக் கொடுப்பனவுகள், பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகள் என்பனவற்றுக்கான 1983 இன் (தற்காலிகம்) ரூ. 2,770 இலட்சம், வெளிநாட்டு நிருவாகக் கடன்பாடுகளின் மீளக் கொடுப்பனவான 1981 இன் ரூ. 370 இலட்சம், 1982 இன் ரூ. 490 இலட்சம், 1983 இன் (தற்காலிகம்) ரூ. 1,460 இலட்சம், 1984 இன் (தற்காலிகம்) ரூ. 960 இலட்சம் என்பவற்றை உள்ளடக்கும்.

(ஈ) ரூபாக் கடன்களை மீளச் செலுத்துவதற்கான கடன்கரைப்பு நிதியத்திற்கான உதவு தொகைகள் 1984 சனவரியிலிருந்து நிறுத்தப்பட்டன.

(உ) வங்கித் தொழில் துறைக்கான ரூபாக் கடன்களின் மீளக் கொடுப்பனவாகிய 1981 இன் ரூ. 320 இலட்சத்தினையும், 1982இன் ரூ. 160 இலட்சத்தினையும், 1983 இன் ரூ. 360 இலட்சத்தினையும், 1984 இன் ரூ. 1,170 இலட்சத்தினையும் உள்ளடக்கும்.

* அரச கணக்குகளின் இறுதிப்படுத்தலில் தங்கியிருக்கும் தற்காலிகத் தரவுகளின் அடிப்படையில் அமைந்தவை.

குறையானது உள்நாட்டு வெளிநாட்டு மூலங்கள் இரண்டிலுமிருந்து பெற்ற மூலவளங்களினால் நிதியிடப்பட்டது. வெளிநாட்டு மூலங்கள் 1983 இன் 51 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 71 சதவீதமான குறையை நிதியிட்டன. மொத்த வெளிநாட்டு நிதி ரூ. 112,260 இலட்சமாக விளங்கியது. கடன்கள் வடிவில் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட வரவுகள் ரூ. 79,570 இலட்சமாகவும் நன்கொடைகள் ரூ. 32,690 இலட்சமாகவும் விளங்கின. உள்நாட்டு மூலங்களைப் பொறுத்தவரை மொத்த வங்கியல்லாச் சந்தைக் கடன்பாடுகளிலிருந்தும் சந்தையல்லாத வங்கியல்லா மூலங்களிலிருந்தும் ரூ. 66,010 இலட்சம் பெறப்பட்டது. வெளிநாட்டு உள்நாட்டு வங்கியல்லா மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்கதாகவிருந்த மொத்தத் தொகை வரவு செலவுத் திட்டக் குறையினை ரூ. 19,650 இலட்சத்தினால் விஞ்சியது. வங்கித் தொழில் அமைப்பிற்கான மீளக் கொடுப்பனவாகிய ரூ. 27,600 இலட்சத்திற்கும் காசு நிலுவைகளின் பயன்பாடாகிய ரூ. 6,790 இலட்சத்திற்கும் ஏற்ப சீராக்கம் செய்யுமிடத்து இவ்வாண்டில் இறைத் தொழிற்பாட்டின் சுருக்கத் தாக்கம் 1983 இன் ரூ. 4,740 இலட்சம் கொண்ட விரிவுத் தாக்கத்திற்கெதிராக ரூ. 20,820 இலட்சமாக விளங்கியது.


1984 இற்கான இறைத் தொழிற்பாட்டின் தொகுப்பு கடந்த மூன்று ஆண்டுகளுக்குரிய ஒப்பிடத்தக்க தரவுகளுடன் அட்டவணை 1.42 இல் தரப்பட்டுள்ளது. அரசின் இறைத் தொழிற்பாடுகள் தொடர்பான தேறிய பணக் குறை கடந்த ஒன்பது ஆண்டுகளுக்குரிய ஒப்பிடத்தக்க தரவுகளுடன் புள்ளி விபரப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

**அரசிறை**

அரசின் அரசிறை 1984 இல் முழுமையான அளவிலும் சார்பு ரீதியிலும் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான அரசிறையின் மட்டம் 21 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு அதிகரித்தது. முழுமை நியதிகளில் அரசிறை 50 சதவீதத்தினால் அதிகரித்து ரூ. 377,310 இலட்சமாக விளங்கியது. கடந்த ஆறு ஆண்டுகளாகப் பதிவு செய்யப்பட்ட ஆண்டுக்காண்டு ஏற்பட்ட வளர்ச்சியில் இதுவே ஆகக்கூடியதாகும். வரிகளிலிருந்துகிடைத்த அரசிறை 51 சதவீதத்தினால் அதிகரித்து ரூ. 312,150 இலட்சமாக விளங்கிய வேளையில் வரியல்லாத அரசிறை 45 சதவீதத்தினால் அதிகரித்து ரூ. 65,160 இலட்சமாக விளங்கியது. வரி அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் தேயிலைப் பெறுமான விகிதவரி, இறக்குமதித் தீர்வைகள், மொத்த விற்பனவு வரிகள், வருமான வரிகள், ஏற்றுமதித் தீர்வைகள் என்பவற்றிலிருந்து கிடைத்த உயர்ந்தளவான வரவுகள் காரணமாக ஏற்பட்டதாகும். வட்டியும் பங்கிலாபங்களும் கடன்கள் முற்பணங்களின் மீளக் கொடுப்பனவு, வர்த்தக முயற்சிகளிலிருந்து கிடைத்த மொத்த வரவுகள் என்பவற்றிலிருந்து கிடைத்த கணிசமான வரவுகள் வரியல்லா அரசிறையில் ஏற்பட்ட பெரும் அதிகரிப்பிற்குப் பெரிதும் உதவின.

அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பு அரசிறையைச் சேகரிக்கும் முயற்சிகள் உச்ச நிலையையடைந்த 1983 ஆம் ஆண்டிலிருந்து அவதானிக்கப்பட்ட போக்குடன் ஒத்ததாக விளங்கியது. தற்காலிகக் கணிப்புக்களின்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்களின் விகிதாசாரமாக அரசிறையில் ஏற்பட்ட மாற்றங்களை அளவிட்ட அரசிறையின் செழிப்புக் குணகம் 1983 இன் 1.89 உடன் ஒப்பிடுகையில் 1984 இல் 2.02 ஆக விளங்கியது. வரி அரசிறையின் செழிப்புக் குணகம் 1983 இன் 1.56 உடன் ஒப்பிடுகையில் 2.07 சதவீதமாக விளங்கியது. இவ்வாண்டில் அரசிறையில் ஏற்பட்ட கவர்ச்சியான செயலாற்ற

## அரசின் அரசிறையும் செலவும்




இலங்கை மத்திய வங்கி.

மானது பெரும்பாலும் எதிர்பாராத இலாபங்கள், கடன் கரைப்பு நிதியங்கள் தொடர்பான கணக்கிடல் முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் சில குறிப்பிட்ட அரசிற்குள்ளான மாற்றல்கள் என்பவற்றுல் ஏற்பட்டதாகும். மரப்பயிர்களுக்கான உயர்ந்த விலைகளும், உலக சந்தையில் பெற்றோலியப் பொருட்களின் குறைவான விலையும் பொருளாதாரத்தில் கணிசமான அளவு உயர்ந்த வரி விதிக்கத்தக்க மிகையை உருவாக்க உதவின. அரசின் கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்கத் தக்க வகையில் வருமானவரி மொத்த விற்பனவு வரிகள், இறக்குமதித் தீர்வைகள் என்பவற்றின் உள்ளடக்கம் விரிவாக்கப்பட்டமையும் அரசின் அரசிறை மட்டத் தினை உயர்த்துவதற்கு உதவியது. இத்துடன் இதுவரை கடன்கரைப்பு நிதியங் களின் வருமானமாகக் கணிக்கப்பட்ட கடன்கரைப்பு நிதியங்களின் வட்டி வரு மானமும் இவ்வாண்டில் அரசிறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இம்மூலவளங் களில் பெருமளவான பங்கு முன்பு கடன்கரைப்பு நிதியங்களினுல் அரசின் பிணை களில் முதலிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. நடைமுறையாண்டில் வரவு வைக் கப்பட்ட முன்னைய ஆண்டுகள் தொடர்பான இறக்குமதித் தீர்வைகளின் சேகரிப்புக் களையும் அரசிறைப் பெறுகைகள் உள்ளடக்கியுள்ளன.

வரவுசெலவுத் திட்ட ஒதுக்குகளினுல் நிதியிடப்பட்ட வரி வரவுகள், கடன் கரைப்பு நிதியங்களின் வட்டி வருமானம் என்பன நீங்கலான அரசின் மொத்த அரசிறை 1983 இனைவிட 30 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. அரசிற்கிடையிலான மாற்றல்கள் நீங்கலான அரசிறையின் செழிப்புக் குணகம் 1.23 ஆக அமைந்து 1984 இன் அரசிறையின் செழிப்புத் தன்மையைக் காட்டு வதாக விளங்கியது. மரப்பயிர்த்துறையிலிருந்து கிடைத்த அதிகரித்த அரசிறையும் நீக்கப்படுமிடத்து மொத்த அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பு 18 சதவீதமாக அமைந்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வழமையான அதிகரிப்பு வீதத்தினைவிடச் சிறிதளவு குறைவானதாகும். அரசிறையில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு பெரும்பாலும் 1984 வரவுசெலவுத் திட்டத்திலும் இவ்வாண்டுக் காலப் பகுதியிலும் அறிவிக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமுறைகள் காரண மாக ஏற்பட்டதாகும். எனவே இவ்வாண்டில் அடையப்பட்ட அரசிறையின் உயர்வான செழிப்புக் குணகம் அரசிறை அமைப்பில் உறுதியான முன்னேற்றத்தை யன்றி ஒரு மாற்றல் தன்மையினையே கொண்டிருந்தது. இதுவரை புகுத்தப்பட்ட பல்வேறு அரசிறை வழிமுறைகளும், அரசிறை அமைப்பில் நடைமுறைப்படுத்தப் பட்ட முன்னேற்றங்களும் அரசிறையை விரிவாக்குவதற்கும் செழிப்படையச் செய்வதற்கும் போதுமானதல்லாததாகத் தெரிகின்றது. இது வரியின் உள்ளடக் கத்தையும், வரி அடிப்படையினையும் விரிவாக்கும் வழிமுறைகளுடன் தொடர்பான கடுமையான அரசிறைச் சேகரிப்புகளின் தேவையினை வேண்டி நிற்கின்றது. இது தொடர்பாக உற்பத்தியினை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு சில வரி வீதங்களைக் கீழ்நோக்கித் திருத்தியமைத்தமை காரணமாக அரசிறையை விட்டுக்கொடுக்க நேரிட்ட சந்தர்ப்பங்களும் ஏற்பட்டமை கவனிக்கத்தக்கதாகும்.

வெளிநாட்டுத் துறையிலிருந்து கிடைத்த அதிகரித்த அரசிறை, கணக்கிடல் முறைகளில் ஏற்படுத்தப்பட்ட மீளாய்வுகள் இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப் பட்ட புதிய அரசிறை வழிமுறைகள் என்பன 1984 இன் அரசிறை அமைப்பில் குறிப்பிட்ட மாற்றங்களை வேண்டி நின்றன. மொத்த அரசிறையில் வரிச் சேகரிப் புக்களின் பங்கு 1983 இன் 82 சதவீதத்திலிருந்து 1984 இல் 83 சதவீதத்திற்கு அதிகரித்து 1980 இலிருந்து அவதானிக்கப்பட்டுவந்த போக்கினை மாற்றியமைத் தது. மொத்த வரி அரசிறையில் பன்னுட்டு வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட வரிகளிலிருந்து கிடைத்த அரசிறை 1983 இன் 48 சதவீதத்திலிருந்து 1984 இல் 56 சதவீதத்திற்கு உயர்வடைந்த வேளையில் உற்பத்திச் செலவினம்

மீதான வரிகளின் பங்கு 83 சதவீதத்திலிருந்து 82 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முந்திய ஆண்டறிக்கைகளில் அவதானிக்கப்பட்டதனைப்போன்று அரசிறையைத் திரட்டும் நோக்கங்களுக்கு வெளிநாட்டு வர்த்தகத்தில் பெருமளவு தங்கியிருத்தல் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப உள்நாட்டு வரவுசெலவுத் திட்டமும் வளைந்து கொடுக்கவேண்டிய நிலையை ஏற்படுத்தும். வரியல்லாத அரசிறை வகுப்பில், வட்டி, இலாபங்கள், பங்கிலாபங்களின் பங்கு மொத்த வரியல்லாத அரசிறையில் 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் வர்த்தக முயற்சிகளிலிருந்து கிடைத்த மொத்த வரவுகளின் பங்கு மாற்றமுறாது 29 சதவீதமாக விளங்கியது. கடன்கள் முற்பணங்கள் என்பவற்றின் மீளக் கொடுப்பனவுகளின் பங்கு 3 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு அதிகரித்தது.

மொத்த விற்பனவு வரிகளிலிருந்து கிடைத்த மொத்த அரசிறைச் சேகரிப்புக்கள் ரூ. 81,440 இலட்சமாக விளங்கி முந்திய ஆண்டிலும்விட 31 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்து 1984 இன் மொத்த வரி அரசிறையில் 26 சதவீதத்திற்கு வகை கூறின. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் மொத்த விற்பனவு வரிகள் 1983 இன் 5.1 சதவீதத்திலிருந்து 1984 இல் 5.4 சதவீதத்திற்கு அதிகரித்தன. இவ்வதிகரிப்பு பெரும்பாலும் அதிகரிக்கப்பட்ட வரி வீதங்கள் அரசின் இறக்குமதிகளையும் உள்ளடக்கும் வகையில் உள்ளடக்கத்தினை விரிவுபடுத்தியமை, சிறந்த வரிச்சட்ட நடைமுறைப்படுத்தலும் இணக்கமும் என்பன காரணமாக ஏற்பட்டதாகும். தேர்ந்த விற்பனவுகள் வரிகளிலிருந்து கிடைத்த அரசிறைச் சேகரிப்புக்கள் ரூ. 57,870 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டிலும்விட 79 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பைக் காட்டின. இதன் விளைவாக மொத்த வரி அரசிறையில் தேர்ந்த விற்பனவுகள் வரிகளின் பங்கு 16 சதவீதத்திலிருந்து 19 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புபடுத்தி நோக்குகையில் தேர்ந்த விற்பனவுகள் வரிகள் 2.7 சதவீதத்திலிருந்து 3.8 சதவீதத்திற்கு அதிகரித்தன. இவ்வதிகரிப்பு பெரும்பாலும் 1983 இலும்விட மூன்று மடங்கிற்கும் மேலான அதிகரிப்பினைப் பதிவு செய்தமைக்கு தேயிலைப் பெறுமான விகித வரியிலிருந்து கிடைத்த உயர்ந்த வரவுகள் பெருமளவு காரணமாகும்.

ஏற்றுமதித் தீர்வைகளிலிருந்து கிடைத்த மொத்த அரசிறைச் சேகரிப்பு ரூ. 31,750 இலட்சமாக அமைந்து 1983 இலும்விட 29 சதவீதமான அதிகரிப்பைப் பதிவு செய்து கடந்த அண்மை ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினை மாற்றியமைத்தது. மொத்த வரி அரசிறையின் சதவீதமாக நோக்குகையில் ஏற்றுமதித் தீர்வைகள் 1983 இன் 12 சதவீதத்திலிருந்து 1984 இன் 10 சதவீதத்திற்குத் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புபடுத்தி நோக்குகையில் ஏற்றுமதித் தீர்வைகளிலிருந்து கிடைத்த அரசிறைச் சேகரிப்புக்கள் 1984 இல் 2.1 சதவீதத்திற்குச் சிறிதளவால் அதிகரித்தன. ஏற்றுமதித் தீர்வைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் தேயிலை, இறப்பர் என்பவற்றின் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த உயர்ந்த வரவுகள் காரணமாக ஏற்பட்டதாகும். இறக்குமதித் தீர்வைகளைப் பொறுத்தவரை சேகரிப்புக்கள் ரூ. 79,450 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டிலும்விட 64 சதவீத அதிகரிப்பைக் காட்டியதுடன் 1984 இன் மொத்த வரி அரசிறையில் 25 சதவீதத்திற்கும் வகை கூறின. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் இறக்குமதித் தீர்வைகள் 4.0 சதவீதத்திலிருந்து 5.2 சதவீதத்திற்கு உயர்வடைந்தன. இவ்வதிகரிப்புப் பெரும்பாலும் 1984 சனவரி தொடக்கம் அரசின் இறக்குமதிகளை உள்ளடக்கும் வகையில் வரியின் உள்ளடக்கம் விரிவுபடுத்தப்பட்டமையினால் ஏற்பட்டதாகும்.

வருமான வரிகளிலிருந்து கிடைத்த அரசிறை ரூ. 54,800 இலட்சமாக அமைந்து, முந்திய ஆண்டினைவிட 63 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்ததுடன் 1984 இன் மொத்த வரி அரசிறையில் 18 சதவீதத்திற்கு வகை கூறியது. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக வருமானவரிகளை நோக்கின் 1983 இன் 2.8 சதவீதத்திலிருந்து 1984 இல் 3.6 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இது பெரும்பாலும் கூட்டு வருமான வரிகளில் ஏற்பட்ட 50 சதவீத கணிசமான அதிகரிப்பினுல் ஏற்பட்டதாகும். இவ்வதிகரிப்பில் பெருமளவு பங்கு அரசதுறைக் கூட்டுத்தாபனங்களிலிருந்து பெற்ற உயர்ந்த அளவிலான வரிச் சேகரிப்புக்களினுல் ஏற்பட்டதாகும். கூட்டல்லா வருமான வரிச் சேகரிப்புக்கள் ஏறக்குறைய இரு மடங்காக விளங்கின.

1984 இல் வரியல்லாத அரசிறைச் சேகரிப்புக்கள் ரூ. 65,160 இலட்சமாக விளங்கி 1983 இனைவிட 45 சதவீத அதிகரிப்பைக் காட்டின. மொத்த அரசிறையில் வரியல்லாத அரசிறையின் பங்கு 18 சதவீதத்திலிருந்து 17 சதவீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. வரியல்லா அரசிறையில் ஏற்பட்ட முழுமையான அதிகரிப்பு பெரும்பாலும் இவ்வாண்டின்போது நடைமுறைப்படுத்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமுறைகளினுலும் கடன்கரைப்பு நிதியங்களின் வட்டி வருமானத்தினை அரசின் அரசிறையாகக் கணிப்பதனுலும் ஏற்பட்டதாகும். எனினும், கடன்கரைப்பு நிதியங்களினது நீங்கலான வட்டி வருமானம் 1983 இனைவிட 25 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. 1984 இன் இலாபங்களும் பங்கிலாபங்களும் ரூ. 5,590 இலட்சமாக அமைந்து 1983 இனைவிட ஏறக்குறைய மூன்று மடங்கு அதிகரிப்பைக் காட்டின. இம்முன்னேற்றமானது கூட்டுத்தாபனங்கள் அவற்றின் வரிக்குப் பிந்திய இலாபங்களிலிருந்து 50 சதவீத பங்கிலாபத்தினை அறிவித்தமையினுல் ஏற்பட்டதாகும். மொத்த வரியல்லா அரசிறையில் முக்கிய விடயம் அரசிற்கு மாற்றல் செய்யப்பட்ட ரூ. 16,500 இலட்சம் கொண்ட மத்திய வங்கி இலாபங்கள் ஆகும். நாணய விதிச் சட்டத்தின் நியதிகளுக்கேற்ப செய்யப்பட்ட இம்மாற்றல் மத்திய வங்கிக்கான அரசின் கடப்பாடுகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுவதற்காகச் செய்யப்பட்டதாகும்.

அரசின் அரசிறை பற்றிய விபரமான பகுப்பு புள்ளிவிபரப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

## செலவு

1984 இல் அரசின் செலவு 1983 உடன் ஒப்பிடுகையில் 14 சதவீதமான குறைந்தளவு வீதத்தில் வளர்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக நோக்குகையில் மொத்தச் செலவு 38 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மீண்டெழும் வாக்குகள் மீதான செலவு 21 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் முற்பணக் கணக்குகளின் தேறிய வெளிக் கொடுப்பனவுகள் 1983 இனைவிட ஏறத்தாழ மும்மடங்கு அதிகரிப்பினைக் காட்டின. மூலதன வாக்குகளின் மீதான செலவு சிறிதளவால் அதிகரித்தது. எவ்வாருயினும் 1984 இன் பதிவு செய்யப்பட்ட மொத்தச் செலவு மூல மதிப்பீடுகளைவிட மிகவும் கூடுதலாகக் காணப்பட்டன. மூல மதிப்பீடுகளின்படி மொத்தச் செலவு 1983 இன் மட்டத்தினைவிட மீண்டெழும் வாக்குகளின்கீழ் 17 சதவீத அதிகரிப்பையும் மூலதன வாக்குகளின்கீழ் 13 சதவீத வீழ்ச்சியையும் கொண்டு 1 சதவீதம் மட்டும் அதிகமாக அமையுமென எதிர்பார்க்கப்பட்டது. முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் மீதான தேறிய வெளிக்கொடுப்பனவுகள் ரூ. 3,000 இலட்சமாக அல்லது 1983 இல் பதிவு செய்யப்பட்ட மட்டத்தில் நாலில் ஒன்ருக மதிப்பிடப்

பட்டன. செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு 1984 இன் முதல் அரைப்பகுதியில் ஏற்பட்ட செலவு வெட்டுக்களினுல் மேலும் கட்டுப்படுத்தப்படுமென எதிர்பார்க் கப்பட்டது.

இவ்வாண்டில் செலவில் ஏற்பட்ட உயர்வடைந்து செல்லும் அதிகளவு தாக்கமானது பெருந்தொகையான துணை ஒதுக்கு மதிப்பீடுகளின் ஒப்புதல்களையும் முற்பணக் கணக்கு நடவடிக்கைக்காக நிதிகளை விடுவிப்பதனையும் ஏற்படுத்திக் கணிசமானளவு வரவு செலவுத் திட்ட மூலவளங்களை நாடி நின்றது. இவ் வாண்டில் மூலதன வாக்குகளின்கீழ் ரூ. 53,350 இலட்சத்தினையும், மீண்டெழும் வாக்குகளின்கீழ் ரூ. 19,130 இலட்சத்தினையும் கொண்ட ரூ. 72,490 இலட்சம் கொண்ட துணை ஒதுக்கு மதிப்பீடுகள் ஒப்புதலளிக்கப்பட்டன. மொத்தத் துணை ஒதுக்கு மதிப்பீடுகளில் ரூ. 24,550 இலட்சம் அரசிற்கிடையிலான மாற்றல்களாக விளங்கின. இதில் ரூ. 22,940 இலட்சம் சில குறிப்பிட்ட அரச முகவர்களினுல் செலுத்தப்படவேண்டிய வரிகளுக்கான கொடுப்பனவுகளாகும். மீதியான துணை ஒதுக்கு மதிப்பீடுகள் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு மூலங்களினுல் நிதியிடப் பட்ட புதிய செலவுகள் தொடர்பானதாகும். வெளிநாட்டு உதவியினுல் நிதி யிடப்பட்ட செலவுகளினுல் ஏற்பட்ட துணை ஒதுக்கு மதிப்பீடுகள் ரூ. 23,960 இலட்சமாக அமைந்தன. மீதியில் ஒரு பகுதி பாதுகாப்புக் காரணங்களாலும் பாதகமான காலநிலை நிலைமைகளினுலும் எழும் எதிர்பாராத செலவுகள் தொடர் பானதாகும். எவ்வாருயினும் இவ்வாண்டில் அனுமதிக்கப்பட்ட துணை ஒதுக்கு மதிப்பீடுகளின் மட்டம் ஓரளவிற்கு உயர்வாக விளங்கியதென்பதும் செலவு முகாமைத்துவம் மேலும் முன்னேற்றத்தினை வேண்டி நின்றமையும் கவனிக்கத் தக்கது.

மேற்கூறப்பட்டவாறுன செலவு அதிகரிப்பினைப் பிரதிபலிப்பதாக மீண் டெழும் வாக்குகள், முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் என்பன மீதான செலவு கள் மொத்தச் செலவில் 1983 இன் 54 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் 59 சதவீதமாக அமைந்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்பு படுத்தி நோக்குகையில் மீண்டெழும் செலவும் முற்பணக் கணக்குகளின் தேறிய வெளிக் கொடுப்பனவுகளும் 1983 இன் 20.6 சதவீதத்திலிருந்து 1984 இல் 21.0 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் மீண்டெழும் வாக்குகள் மீதான செலவு தொடர்பான விகிதாசாரம் 19.7 சதவீதத்திலிருந்து 19.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமான மூலதனச் செலவு 17.9 சதவீதத்திலிருந்து 14.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

இவ்வாண்டில் அவதானிக்கப்பட்ட மீண்டெழும் செலவின் அமைப்பானது சம்பளங்களும் கூலிகளும் நீங்கலான பொருட்கள் சேவைகளில் ஏற்பட்ட அதிகரிப் பினதும் மாற்றல்களின் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சியினதும் பண்பினைக் கொண்டுள்ளது. சம்பளங்களையும் கூலிகளையும் உள்ளடக்கிய பொருட்கள் சேவை கள் மீதான செலவு 32 சதவீதத்தினுல் அதிகரித்து ரூ. 135,690 இலட்சமாக விளங்கிய வேளையில் மாற்றல்கள் 12 சதவீதத்தினுல் அதிகரித்து ரூ. 153,580 இலட்சமாக விளங்கின. பொருட்கள் சேவைகள் மீதான செலவு அரச திணைக் களங்களினுலும் முகவர்களினுலும் செலுத்தப்பட்ட வரிக் கொடுப்பனவுகளின் பேரில் பெருமளவு ஒதுக்கினை உள்ளடக்கியிருந்தது. இத்துடன் இறக்குமதித் தீர்வை மீளளிப்புத் திட்டம், பாதுகாப்பு என்பன மீதான உயர்வான செலவு பொருட்கள் சேவைகள் மீதான செலவில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கும் பெருமள விற்குப் பொறுப்புவகித்தது. கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் முழுமை

யான ரீதியில் வீழ்ச்சியடைந்தன. வட்டிக் கொடுப்பனவுகளின் வளர்ச்சியும் இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்தது. எனினும் குடியிருப்பாளர்கள் ஏனைய வகைகளுக்கான மாற்றல்கள் 1983 இனைவிடக் கணிசமான அதிகரிப்பினைக் காட்டின.

மேற்கூறப்பட்ட செலவு வளர்ச்சியின் போக்கினைப் பிரதிபலிப்பதாக மொத்த மீண்டெழும் செலவில் மாற்றல்களின் பங்கு 1983 இன் 57 சதவீதத்திலிருந்து 1984 இல் 53 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சம்பளங்களும் கூலிகளும், வட்டிக் கொடுப்பனவுகள், ஓய்வூதியங்கள் என்பவற்றின் மீதான ஒன்று சேர்ந்த செலவு ரூ. 156,840 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் 59 சதவீதமான பங்குடன் ஒப்பிடுகையில் 54 சதவீதமான குறைந்தளவு பங்கிற்கு வகை கூறியது. இம்மூன்று விடயங்கள் மீதான செலவு 10 சதவீதமான அதிகரிப்பினை மட்டும் பதிவு செய்தது. வர்த்தக முயற்சிகள் மீதான மொத்தச் செலவு ரூ. 17,750 இலட்சமாக அமைந்து மொத்த மீண்டெழும் செலவில் 6 சதவீதமாகப் பெரும்பாலும் மாற்றமின்றியிருந்தது. வர்த்தக முயற்சிகள் மீதான செலவு 24 சதவீதத்தினுல் அதிகரித்தது.

பொருட்கள் சேவைகள் மீதான மொத்த மீண்டெழும் செலவு ரூ. 61,850 இலட்சம் கொண்ட சம்பளங்கள், கூலிகளையும் ரூ. 73,840 இலட்சம் கொண்ட ஏனைய பொருட்கள் சேவைகள் மீதான செலவினையும் உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டில் சம்பளங்களும் கூலிகளும் 1983 இனைவிட 7 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இது பெரும்பாலும் 1984 மாச்சிலும், செத்தெம்பரிலும் இரு தடவைகள் வாழ்க்கைச் செலவுப்படி உயர்த்தப்பட்டமையினுல் ஏற்பட்டதாகும். ஏனைய பொருட்கள் சேவைகள் மீதான செலவு 63 சதவீதத்தினுல் அதிகரித்தது. இது ஓரளவிற்கு அரசினுலும் அதன் முகவர்களினுலும் வரிக் கொடுப்பனவிற்காக ஒதுக்கப்பட்ட உயர்ந்த ஒதுக்குக் காரணமாக ஏற்பட்டதாகும்.

மாற்றல்கள் மீதான மொத்தச் செலவில் குறுங்காலத் திறைசேரிக் கடன்பாடுகள் மீதான வட்டியையும் உள்ளடக்கிய வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 73,190 இலட்சமாக அமைந்து 11 சதவீத அதிகரிப்பைக் காட்டின. இது கடந்த அண்மைக் காலத்தில் பதிவு செய்யப்பட்ட ஆண்டுக்கு ஆண்டு ஏற்பட்ட அதிகரிப்பில் மிகவும் குறைவானதாகும். இதன் விளைவாக மொத்தச் செலவில் வட்டிக் கொடுப்பனவின் பங்கு 28 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த மாற்றல்களில் இதன் பங்கு மாற்றமின்றி 48 சதவீதமாக விளங்கியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புபடுத்தி நோக்குகையில் வட்டிக் கொடுப்பனவுகள் 5.4 சதவீதத்திலிருந்து 4.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. வட்டிக் கொடுப்பனவில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சியானது திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சியடைந்தமை, ரூபாக் கடன்களின் கீழான குறைந்த மட்டத்திலான கடன்பாடுகள், குறைவான பன்னுட்டு வட்டி வீதங்கள் என்பன காரணமாக ஏற்பட்டதாகும். மொத்த ஓய்வூதியங்கள் ரூ. 21,800 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினைவிட 20 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தன. இவ்வதிகரிப்பு பெரும்பாலும் வாழ்க்கைச் செலவுப்படி திருத்தியமைக்கப்பட்டமையினுல் ஏற்பட்டதாகும்.

வட்டிக் கொடுப்பனவுகளும் ஓய்வூதியங்களும் நீங்கலான மாற்றல்கள் ரூ. 58,580 இலட்சமாக அமைந்து 12 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்து மீண்டெழும் செலவில் முந்திய ஆண்டின் 22 சதவீதம் கொண்ட பங்குடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்திற்கு வகை கூறின. இம்மாற்றல்கள் கூட்டுத்தாபனங்களுக்கான ரூ. 17,490 இலட்சத்தினையும், உள்ளூராட்சி மேலாண்மைச் சபைகளுக்கான ரூ. 5,970 இலட்சத்தினையும், குடியிருப்பாளர்களுக்கான ரூ. 35,120 இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தன. கூட்டுத்தாபனங்களுக்கான நடைமுறை மாற்றல்கள் புள்ளிவிபரப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

குடியிருப்பாளர்கள் மற்றும் ஏனைய வகுப்புகளைச் சார்ந்த மாற்றல்கள் 21 சதவீதத்தினுல் அதிகரித்தன. இவ்வதிகரிப்பு பெரும்பாலும் மண்ணெண்ணெய் முத்திரைத் திட்டம், நலன்புரிக் கொடுப்பனவுகள் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரித்த செலவு காரணமாக ஏற்பட்டதாகும். உணவு முத்திரைகள் மீதான மொத்தச் செலவு ரூ. 14,050 இலட்சமாகவும், மண்ணெண்ணெய் முத்திரைகள் ரூ. 3,970 இலட்சமாகவும் விளங்கின. குழந்தைகளின் பாலுணவு மீதான உதவு தொகை ரூ. 900 இலட்சமாக விளங்கியது. இவ்வகுப்பு திறைசேரிக்கான வெளிநின்ற முற்பணங்கள் மீது உணவு ஆணையாளரால் செலுத்தப்படவேண்டிய உதவுதொகையான ரூ. 1,610 இலட்சம் கொண்ட வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியிருந்தது. தேசிய சேமிப்பு வங்கிக்கான உதவு தொகை ரூ. 4,980 இலட்சமாக விளங்கியது.

முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் 1983 இல் ரூ. 11,200 இலட்சம் கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில் ரூ. 29,170 இலட்சம் கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவினை ஏற்படுத்தின. இதன் விளைவாக முன்னைய ஆண்டின் 2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் மொத்த வரவு செலவுத்திட்ட செலவில் முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் ஏறக்குறைய 5 சதவீதத்திற்கு வகைகூறின. முற்பணக் கணக்கின் தேறிய வெளிக் கொடுப்பனவில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் நிதிப் பிரச்சினையை எதிர்நோக்கிய கூட்டுத்தாபனங்களுக்கான உயர்ந்தளவிலான முற்பணங்கள் காரணமாக ஏற்பட்டதாகும். சில குறிப்பிட்ட கூட்டுத்தாபனங்களுக்கு அவற்றின் நட்டங்களை நிதியிடுவதற்கும் வெளிக் கொடுப்பனவு செய்யப்பட்டது. ''முற்பணக் கணக்குகள் தேறிய மிகைகளிலிருந்தான கடன்களின்'' கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுத்தாபனங்களுக்கான மொத்தத் தேறிய கொடுப்பனவுகள் ரூ. 19,490 இலட்சமாக அமைந்தன. ஒப்பிடுகையில் 1983 இல் ரூ. 4,680 இலட்சம் கொண்ட வெளிக் கொடுப்பனவு காணப்பட்டது. அரச திணைக்களங்கள் தொடர்பான தேறிய முற்பணங்கள், களஞ்சியங்களும் பொருட்களும் தொடர்பான தேறிய முற்பணங்கள் என்பன 1983 இன் ரூ. 4,160 இலட்சம் ரூ. 1,930 இலட்சம் என்பனவற்றுடன் ஒப்பிடுகையில் 1984 இல் முறையே ரூ. 8,510 இலட்சமாகவும் ரூ. 1,540 இலட்சமாகவும் விளங்கின. எனினும் ஏனைய முற்பணங்களின் கீழ் ரூ. 370 இலட்சம் கொண்ட உட்கொடுப்பனவும் காணப்பட்டது.

கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய மூலதனச் செலவு 1984 இல் ரூ. 217,500 இலட்சமாக அமைந்து 1983 இல் ஏற்பட்ட 16 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ஒரு சிறிதளவான அதிகரிப்பைக் காட்டியது. இவ்வாண்டின்போது பெரும் அளவிலான துணை ஒதுக்கு மதிப்பீடுகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டபோதிலும் செலவில் ஏற்பட்ட சிறிதளவான வளர்ச்சி பெரும்பாலும் ரூபாக் கடன்களை மீளச் செலுத்துவதற்கான கடன் கரைப்பு நிதிய உதவுதொகைகள் நிறுத்தப்பட்டமையினுலும் சில குறிப்பிட்ட வங்கிகளின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட உயர்ந்த மட்டத்திலான குறைச் செலவுகளினுலும் ஏற்பட்டதாகும். 1984 இல் ஏற்பட்ட குறைச்செலவு ஓரளவிற்கு ஆண்டின் முதல் அரைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட செலவு வெட்டுக்கள் காரணமாக ஏற்பட்டது.

கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் நீங்கலான மொத்த மூலதனக் கொடுப்பனவு ரூ. 195,210 இலட்சமாக அமைந்து 1983 இனைவிட 17 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. இவ்வாண்டின் மூலதனச் செலவு இலங்கை மின்சபையினுல் செலுத்தப்படவேண்டிய வரிக் கொடுப்பனவாகிய ரூ. 8,180 இலட்சத்திற்கான ஒதுக்கினையும் உள்ளடக்கும். தேறிய மூலதனச் செலவு (கடன்

தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் நீங்கலான மொத்த மூலதனச் செலவு) 12 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான தேறிய மூலதனச் செலவு 13.7 சதவீதத்திலிருந்து 1984 இல் 12.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியினுல் சீராக்கம் செய்யப்பட்ட தேறிய மூலதனச் செலவு 1982 இன் விலைகளிலான மூலதனச் செலவு முந்திய ஆண்டின் ரூ. 145,920 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 138,640 இலட்சமாக அமைந்து 5 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. எனினும் இவ்வாண்டில் மூலதனச் செலவுகள் ரூ. 9,920 இலட்சம் கொண்ட திறைசேரி வைப்புக்களுக்கு மாற்றல் செய்யப்பட்ட பயன்படுத்தப்படாத செலவின் ஒதுக்குகளையும் உள்ளடக்கும். இது 1983 இல் ரூ. 18,360 இலட்சமாக விளங்கியமையுடன் ஒப்பிடத்தக்கது. இத்தகைய மாற்றல்களுக்கேற்ப சீராக்கம் செய்யுமிடத்து மூலதனச் செலவு வழமையான நியதிகளில் 19 சதவீத அதிகரிப்பினையும், உண்மையான நியதிகளில் ஒரு சதவீத அதிகரிப்பினையும் காட்டியது.

மூலதன வாக்குகளின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட மொத்தச் செலவில் கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல் ரூ. 112,050 இலட்சமாக அமைந்து 1983 இனைவிட 8 சதவீதமான அதிகரிப்பைக் காட்டின. சில குறிப்பிட்ட கூட்டுத்தாபனங் களுக்குக் கடன்களின் வடிவில் முதலிடத்தக்க மூலவளங்களுக்கான ஒதுக்குகளும் காணப்பட்டன. இது முந்திய ஆண்டின் ரூ. 8,010 இலட்சம் கொண்ட ஒதுக் குடன் ஒப்பிடுகையில் ரூ. 6,460 இலட்சமாக விளங்கியது. அரசின் உள்ளூராட்சி மேலாண்மைச் சபைகளுக்கும் ஏனைய நிறுவனங்களுக்குமான மூலதனமாற்றல்கள் 1983 இன் ரூ. 3,270 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 2,250 இலட்சமாக அமைந் தன. அரச திணைக்களங்களினுலும் அமைச்சுக்களினுலும் நேரடியாக மேற்கொள்ளப் பட்ட மூலதனச் செலவு ரூ. 74,450 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினைவிட 44 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் மூலதன வாக்கு களின் குறைச் செலவு துணை ஒதுக்கு மதிப்பீடுகளையும் உள்ளடக்கிய மொத்த ஒதுக்கில் ரூ. 53,060 இலட்சமாக அல்லது 21 சதவீதமாக அமைந்தது. அமைச்சுக் களின் படியான செலவின் பகுப்பும் கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்களும், கடன்களும் புள்ளிவிபரப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

### வரவு செலவுத் திட்டக் குறையை நிதியிடல்

அரசின் செலவின அதிகரிப்புகளை பெருமளவில் விஞ்சிய அரசிறை வருவாய் களின் பெருமளவு அதிகரிப்பு வரவு செலவுத் திட்டக் குறையில் கணிசமான குறைப்பினை ஏற்படுத்த உதவியது. குறை ரூ. 158,620 இலட்சமாக விளங்கி 1983 உடன் ஒப்பிடுகையில் 27 சதவீத வீழ்ச்சியினையும் 1982 உடன் ஒப்பிடுகையில் 21 சதவீத வீழ்ச்சியினையும் காட்டியது. கடந்த பத்து ஆண்டுகளில் இரண்டு தடவைகள் மட்டுமே (1977 உம், 1981 உம்) குறையின் அளவு முழுமையாக நியதிகளில் குறைக்கப்பட்டிருந்தது. மொத்தச் செலவில் குறையின் விகிதம் 1983 இன் 46 சதவீதத்திலிருந்து 1984 இல் 30 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது 1974 தொடக்கம் காணப்பட்டதில் ஆகக் குறைந்த விகிதமாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக நோக்குகையில் வரவு செலவுத் திட்டக் குறை 18 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு வீழ்ச்சி யடைந்தது. வரவு செலவுத் திட்டத்தின் சமமின்மையின் சரியான அளவீடாகிய தேறிய பணக்குறை ரூ. 136,330 இலட்சமாக விளங்கி 18 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக நோக்குகையில் தேறிய பணக்குறை 14 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

நடைமுறைக் கணக்குக் குறையினை அல்லது மிகச் சிறு அளவான மிகையைக் கொண்டிருந்த கடந்த அண்மைக் காலத்தினைப் போலன்றி 1984 இல் மூலதனச் செலவில் கணிசமான அளவு பங்கு அரசதுறைச் சேமிப்புக்களினுல் நிதியிடப் பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக வெளிநாட்டு உள்நாட்டு மூலங்கள் இரண் டிலும் இருந்து கிடைக்கக்கூடியதாகவிருந்த மொத்த மூலவளங்கள் 1977 இற்குப் பின் முதல் தடவையாக மூலவள இடைவெளியை விஞ்சி ரூ. 19,650 இலட்சம் கொண்ட மிகையை ஏற்படுத்தியது. இது வங்கித் தொழில் அமைப்பிற்கான கடனின் மீளக் கொடுப்பனவில் பிரதிபலிக்கப்பட்டது.

குறையை நிதியிடுவதில் ரூ. 112,260 இலட்சத்திற்குச் சமமான தொகை வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்டது. குறையில் இது 1983 இன் 51 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 71 சதவீதமாக அமைந்தது. எனினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புபடுத்தி நோக்குகையில் வெளி நாட்டு மூலங்களிலிருந்து கிடைத்த மூலவளங்கள் 9 சதவீதத்திலிருந்து 7 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. வங்கித்தொழில் அமைப்பிற்கான மீளக்கொடுப் பனவுகள் நீங்கலான உள்நாட்டு மூலங்களிலிருந்து கிடைத்த மொத்தக் கடன்பாடு கள் ரூ. 39,570 இலட்சம் ஆக அமைந்து 65 சதவீத வீழ்ச்சியைக் காட்டின. எனவே உள்நாட்டு நிதி மூலதனச் சந்தைகளை வரவுசெலவுத் திட்டம் நாடியமை மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக நோக்குகையில் 9 சதவீதத்திலிருந்து 3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது ஓரளவிற்குக் கடன்கரைப்பு நிதியங் களிலிருந்து ரூபாக் கடன்களுக்கு உதவப்பட்ட தொகை முற்ருக நிறுத்தப்பட்டமை யினைப் பிரதிபலிக்கின்றது.

உள்நாட்டு வங்கியல்லாச் சந்தை மூலங்களிலிருந்து கிடைத்த கடன்பாடு ரூபாக் கடன்களிலிருந்து கிடைத்த ரூ. 43,440 இலட்சமும், திறைசேரி உண்டியல் கள் மூலம் பெறப்பட்ட ரூ. 13,410 இலட்சமும் கொண்ட வரவுகளை உள்ளடக்கி யிருந்தது. வங்கியல்லாச் சந்தை மூலங்களிலிருந்து பெறப்பட்ட மொத்த நிதிகளில் ஊழியர் சேம நிதியத்தினுல் உதவப்பட்ட தொகை ரூ. 31,520 இலட்சமாக விளங்கிய வேளையில் தேசிய சேமிப்பு வங்கி ரூ. 23,520 இலட்சத்தினை வழங்கியது. மிகுதி தொகை (ரூ. 1,810 இலட்சமும்) பெரும்பாலும் பல்வகைச் சேம, ஓய்வூதிய நிதியங்களினுல் வழங்கப்பட்டது. ரூ. 80 இலட்சம் கொண்ட கடன் கரைப்பு நிதியங்களிலிருந்து பெறப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தி மூலவளங்களின் சதவீதமாக நோக்குகையில் கடன்கரைப்பு நிதியம் நீங்கலான இம்மூலங்களி லிருந்து கிடைத்த உதவுதொகை 3.9 சதவீதத்திலிருந்து 3.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

வங்கியல்லா, சந்தையல்லா மூலங்களிலிருந்து கிடைக்கக்கூடியதாகவிருந்த மொத்த நிதிகள் முந்திய ஆண்டின் ரூ. 23,850 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 9,160 இலட்சமாக அமைந்தன. எனவே வரவுசெலவுத் திட்டக் குறையின் முழுமையான நிதியிடலில் இம் மூலத்தின் பங்கு 11 சதவீதத்திலிருந்து 6 சதவீதத் திற்கு வீழ்ச்சியடைந்தது. சந்தையல்லா மூலங்களிலிருந்து கிடைத்த கடன்பாடுகள் வைப்புக்களுக்கு மாற்றல் செய்யப்பட்ட செலவு ஒதுக்குகள் தொடர்பான நட வடிக்கைகளிலிருந்து எழும் வைப்புக்களையும் உள்ளடக்கிய பல்வேறு வகையான வைப்புக்களை உள்ளடக்கியிருந்தன. மொத்தச் சந்தையல்லாக் கடன்பாட்டில் நிருவாகக் கடன்பாடுகள் ரூ. 1,760 இலட்சமாக விளங்கின.

உள்நாட்டு வங்கியல்லா மூலங்களிலிருந்தும் வெளிநாட்டு மூலங்களிலிருந்தும் பேணப்பட்ட மொத்த மூலவளங்கள் வரவுசெலவுத் திட்டக்குறையை ரூ. 19,650 இலட்சத்தால் விஞ்சின. முதிர்ச்சியடையும் ரூபாக் கடன்களிலிருந்து எழும் மீளக் கொடுப்பனவுகள் நீங்கலாக வங்கித்தொழில் அமைப்பிற்கான மொத்த மீளக் கொடுப்பனவுகள் ரூ. 26,440 இலட்சமாக விளங்கின. முதிர்ச்சியடையும் ரூபாக் கடன்களின் பேரிலான மீளக் கொடுப்பனவுகள் ரூ. 1,170 இலட்சமாக அமைந்தன. ரூ. 6,790 இலட்சங் கொண்ட காசு நிலுவைகள் பயன்படுத்தப்பட்டதன் மூலம் வங்கித்தொழில் முறைக்கான இந்த அளவு மீளக் கொடுப்பனவை மேற்கொள்ள முடிந்தது. இதனுல் 1984 இன் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள் பணநிரம்பல் ரூ. 20,820 இலட்சங் கொண்ட சுருக்கத் தாக்கத்தினை அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1983 இன் 0.4 சதவீத விரிவுத் தாக்கத்திற்கெதிராக 1.4 சதவீத சுருக்கத் தாக்கத்தினை ஏற்படுத்தின.


பொதுப்படுகடன்

1984 முடிவில் வெளிநின்ற மொத்தப் பொதுப்படுகடன் ரூ. 1,059,180 இலட்சமாக அமைந்து 1983 இனைவிட 8 சதவீதமான அதிகரிப்பினைக் காட்டுகின்றது. கடந்த இருபது ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட ஆண்டுக்கு ஆண்டு ஏற்பட்ட அதிகரிப்புகளில் இதுவே மிகக் குறைந்ததாகும். பொதுப்படுகடனின் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு உள்நாட்டுப் படுகடனில் ஏற்பட்டசிறிதளவு வீழ்ச்சி (ஏறக்குறைய 0.2 சதவீதம்) காரணமாக இருந்தவேளை வெளிநாட்டுப் படுகடன் 1983 இனைவிடக் கணிசமான அளவு குறைந்த வீதமான 17 சதவீதத்தினுல் மட்டும் அதிகரித்தது. உள்நாட்டுப் படுகடனில் ரூ. 25,400 இலட்சம் கொண்ட திறைசேரி உண்டியல்கள் இவ்வாண்டில் முதிர்ச்சியடைந்து இறைத் தொழிற்பாட்டின் முன்னேற்றத்தினைப் பிரதிபலித்தது. 1984 இல் புதிய ரூபாய்க் கடன்களின் வழங்கல்கள் 1983 இன் மட்டத்திலிருந்து ஏறக்குறைய அரைப் பங்கினுல் வீழ்ச்சியடைந்தன. இது பெரும்பாலும் கடன்கரைப்பு நிதியங்களிலிருந்து ரூபாக் கடன்களுக்கு உதவுதல் முற்முக நிறுத்தப்பட்டமையினுல் ஏற்பட்டதாகும்.

1984 இறுதியில் மொத்தப் பொதுப்படுகடன் ரூ. 522,370 இலட்சமாக அமைந்து மொத்தப் பொதுப் படுகடனில் 49 சதவீதத்திற்கு வகை கூறியது. ஏனைய நாணயங்களுக்கு எதிரான செலாவணி வீதங்களில் ஏற்பட்ட தளம்பல்களினுல் எழும் மேலதிகப் பொறுப்பினையும் உள்ளடக்கிய வெளிநாட்டுப் படுகடன் ரூ. 536,810 இலட்சமாக விளங்கியது. தேறிய பொதுப்படுகடன் (கடன் கரைப்பு நிதியங்கள் நீங்கலான மொத்தப் பொதுப்படுகடன்) ரூ. 957,410 இலட்சமாக அமைந்து 11 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புபடுத்தி நோக்குகையில் பொதுப்படுகடன் 1983 இன் 81 சதவீதத்திலிருந்து 1984 இல் 70 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டுப் படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 38 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் உள்நாட்டுப் படுகடன் 43 சதவீதத்திலிருந்து 34 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தேறிய பொதுப்படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 71 சதவீதத்திலிருந்து 63 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 72,960 இலட்சமாக அமைந்து 1983 இன் 30 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 11 சதவீதமான மிதமான அதிகரிப்பைக் காட்டியது. வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டி 17 சதவீதத்தினுல் அதிகரித்த வேளையில் உள்நாட்டுப் படுகடன் வளர்ச்சி

## பொதுப்படு கடனின் உள்ளடக்கம்




* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்தப் பொதுப்படுகடன்.

எதிர்க்கணியமாக அமைந்தபோதிலும் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டி வீதம் 9 சதவீதத்தினுல் அதிகரித்தது. உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு 1983 இல் வழங்கப்பட்ட ரூபாக் கடன்களுக்கு 1984 இல் புதிதாக வட்டி செலுத்தப்பட வேண்டியேற்பட்டமை காரணமாகும். உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டியின் சராசரி வீதம் 11.6 சத வீதத்திலிருந்து 1984 இல் 11.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் வெளி நாட்டுப் படுகடன் மீதான வீதம் 3.7 சதவீதத்திலிருந்து 3.2 சதவீதத்திற்கு வீழ்ச்சி யடைந்தது. மொத்தப் படுகடன் மீதான பணிக் கொடுப்பனவுகள் (வட்டியும் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும்) 1984 இல் ரூ. 95,250 இலட்சமாக விளங்கி முந்திய ஆண்டினைவிட 18 சதவீதமான வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இவ்வீழ்ச்சி கடன்கரைப்பு நிதியங்களுக்கான அரசின் உதவுதொகைகள் நிறுத்தப் பட்டமையினுல் ரூபாக் கடன்களின் மீளக் கொடுப்பனவு குறைவடைந்து செலவு மட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினுல் ஏற்பட்டதாகும். இவ்வீழ்ச்சியினதும் 1984 இல் அரசிறையில் ஏற்பட்ட கவர்ச்சியான முன்னேற்றத்தினதும் காரணமாக அரசின் அரசிறையுடன் தொடர்பான மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுள் 46 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் வட்டிக் கொடுப்பனவுகளைத் தொடர்புபடுத்தி நோக்குகையில் இது 5.4 சதவீதத்திலிருந்து 4.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1984 முடிவில் மொத்த உள்நாட்டுப் படுகடன் நீண்டகால நடுத்தரக் கடன்கள் மீதான ரூ. 333,240 இலட்சத்தினையும், குறுகிய கால கடனுன ரூ. 189,130 இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தது. இடைத்தர, நீண்டகாலப் படுகடன் 1983 இனைவிட 4 சதவீதத்தினுல் அதிகரித்த வேளையில் குறுங்காலக் கடன் 6 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக மொத்த உள்நாட் டுப் படுகடனில் இடைத்தர, நீண்டகாலக் கடனின் பங்கு 61 சதவீதத்திலிருந்து 64 சதவீதத்திற்கு அதிகரித்தவேளையில் குறுங்காலக் கடன் 39 சதவீதத்திலிருந்து 36 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1984 முடிவில் வெளிநின்ற உள்நாட்டுப் படுகடனின் உள்ளடக்கம் முந்திய ஆண்டின் ஒப்பிடத்தக்க எண் தொகைகளுடன் அட்டவணை 1.43 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 1.43


**வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன்**

ப. இ. ரூபாய்களில்

| வகுப்பு | 1983 | 1984 | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| (அ) நடுத்தர நீண்டகாலப் படுகடன் .. இதில் | 32,150.2 | 33,323.8 | 3.7 |
| ரூபாக் கடன்கள் ... | 31,953.6 | 33,227.4 | 4.0 |
| நிருவாகக் கடன்பாடுகள் ... | 196.5 | 96.4 | — 50.9 |
| (ஆ) குறுங்காலப் படுகடன் .. | 20,204.4 | 18,913.1 | — 6.4 |
| திறைசேரி உண்டியல் ... | 17,400.0 | 14,860.0 | — 14.6 |
| வரிஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 9.9 | 9.6 | — 3.0 |
| மத்திய வங்கி முற்பணங்கள் .. | 2,794.5 | 4,043.5 | 44.7 |
| மொத்தம் .. | 52,354.6 | 52,236.9 | — 0.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## உள்நாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலான மொத்தப் பொதுப்படுகடன்.

இலங்கை மத்திய வங்கி

மொத்த இடைத்தர, நீண்டகால உள்நாட்டுப் படுகடனில் ஏறக்குறைய 99 சதவீதத்தினை வகிக்கும் ரூபாக் கடன்கள் முந்திய ஆண்டின் 24 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் 4 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்வாண்டில் வழங்கப்பட்ட ரூபாப் பிணைகளின் மொத்தப் பெறுமதி வரவு செலவுத் திட்டத்தின் மூல மதிப்பீடாகிய ரூ. 35,500 இலட்சத்தினை விஞ்சி ரூ. 43,440 இலட்சமாக விளங்கியது. 1983 இல் ரூபாப் பிணைகளின் மொத்த வழங்கல்கள் ரூ. 81,880 இலட்சமாக அமைந்தன. 1984 இல் ரூபாப் பிணைகளுக்கான முக்கிய உதவுநர்களாக ஊழியர் சேம நிதியமும் தேசிய சேமிப்பு வங்கியும் விளங்கின.

ஊழியர் சேம நிதியம் 1984 இல் ரூபாக் கடன்களுக்கு ரூ. 31,520 இலட்சத்தினை வழங்கி முந்திய ஆண்டினைவிட 34 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பு உறுப்பினர்களின் உதவுதொகைகள், முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம் என்பவற்றிலிருந்து கிடைத்த உயர்ந்த வரவுகளினூடாக மூலவளங்கள் கிடைக்கத்தக்கதாகவிருந்தமையினால் ஏற்பட்டதாகும். 1984 இல் உறுப்பினர்களின் உதவுதொகைகளிலிருந்து கிடைத்த மொத்த வரவுகள் 32 சதவீதத்தினால் அதிகரித்து ரூ. 15,830 இலட்சமாக விளங்கிய வேளையில் முதலீடுகளிலிருந்து கிடைத்த வருமானம் 29 சதவீதத்தினால் அதிகரித்து ரூ .11,940 இலட்சமாக விளங்கியது. ஊழியர் சேமநிதியத்திற்கு முதலீடுகளின் முதிர்வுகளிலிருந்து ரூ. 12,450 இலட்சம் கொண்ட வரவும் ஏற்பட்டது. ரூபாப் பிணைகள் மீதான முதலீடுகளினுடன் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் தொகுதிக் கடன்களில் ரூ. 1,500 இலட்சத்தினையும், அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் தொகுதிக் கடன்களின் ரூ. 1,200 இலட்சத்தினையும் ஊழியர் சேம நிதி முதலீடு செய்தது.

1984 இல் தேசிய சேமிப்பு வங்கி ரூ. 10,310 இலட்சத்தினை உதவி முந்திய ஆண்டினைவிட 55 சதவீதமான வீழ்ச்சியைக் காட்டியது. இது பெரும்பாலும் தேசிய சேமிப்பு வங்கியின் முதலிடத்தக்க மூலங்கள் திறைசேரி உண்டியல்கள் போன்ற குறுங்காலச் சொத்துக்களின் முதலீடுகளுக்குத் திருப்பப்பட்டமையினால் ஏற்பட்டதாகும். தேசிய சேமிப்பு வங்கியினால் திறைசேரி உண்டியல்கள் மீது முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை 1984 இறுதியில் ரூ. 13,210 இலட்சமாக விளங்கியது. இவ்வாறு தேசிய சேமிப்பு வங்கியினால் அரசிற்குக் கிடைக்கப்பெற்ற மொத்த மூலவளங்கள் 1984 இல் ரூ. 23,520 இலட்சமாக விளங்கி 1983 இனைவிட 2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன. ஏனைய மூலங்கள் 1984 இல் ரூபாக் கடன்களுக்கு ரூ. 1,610 இலட்சத்தினை வழங்கின. இதில் பல்வேறு ஓய்வூதியங்களும் சேம நிதியங்களும் ரூ. 1,530 இலட்சத்தினை வழங்கின. தேசிய வீடமைப்பு கடன்கரைப்பு நிதியத்தின் பேரில் கடன்கரைப்பு நிதியங்களினால் ரூ. 80 இலட்சம் உதவப்பட்டது.

அரசு இவ்வாண்டில் ரூபாப் பிணைகளின் நியதிகளை 1984 ஓகத்து தொடக்கம் திருத்தியமைத்தது. அரச பிணைகள் மீதான வட்டி வீதம் ஆண்டுக்கு 14 சதத்திலிருந்து 16 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டு முதிர்ச்சிக்காலமும் 5 வருடத்திலிருந்து 6 வருடத்திற்கு அதிகரிக்கப்பட்டது. இதன்படி1984 இன் முதல் ஏழு மாதங்களில் 5 வருட முதிர்ச்சிக்காலத்தைக் கொண்ட ரூ. 25,000 இலட்சம் பெறுமதியுடைய ரூபாப் பிணைகள் ஆண்டுக்கு 14 சதவீத வட்டியில் வழங்கப்பட்டதுடன் ஆண்டின் அடுத்த ஐந்து மாதங்களிலும் ரூ. 18,440 இலட்சம் பெறுமதியுடைய ஆறு வருட முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட ரூபாப் பிணைகள் ஆண்டுக்கு 16 சதவீத வட்டியில் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் முதிர்ச்சியடைந்த இருபத்தி இரண்டு ரூபாக் கடன்களின் பேரில் 1984 இல் ரூபாக் கடன்களின் மொத்த மீளக்

கொடுப்பனவுகள் ரூ. 30,710 இலட்சமாக அமைந்தன. அரசின் நேரடி மீளக் கொடுப்பனவுகள் ரூ. 6,670 இலட்சமாக அமைந்தன. மீதித் தொகை கடன் கரைப்பு நிதியங்கள் வசமிருந்த மூலவளங்களிலிருந்து செலுத்தப்பட்டன.

இவ்வாண்டில் ரூ. 25,400 இலட்சம் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சியடைந்தன. இது முந்திய ஆண்டின் ரூ. 800 இலட்சம் கொண்ட தேறிய கடன்பாட்டுடன் ஒப்பிடத்தக்கது. இதன்படி 1984 முடிவில்வெளிநின்ற திறைசேரி உண்டியர்களின் பொறுப்பு ரூ. 148,600 இலட்சமாக விளங்கியது. திறைசேரி உண்டியல்கள் மீதான உச்ச எல்லை மாற்றமின்றி ரூ. 230,000 இலட்சமாக இருந்தது. 1983 இன் இறுதியில் 12 சதவீதமாக விளங்கிய வட்டி வீதம் யூன் யூலையில் 15 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதன் பின்னர் ஆண்டுக்கு 14 சத வீதமாகக் குறைவடைந்தது.


நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 89 இன் கீழ் மத்திய வங்கியினல் அரசுக்கு வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்கள் முந்திய ஆண்டில் ஏற்பட்ட ரூ. 3,770 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 12,490 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டின. 1984 முடிவில் மத்திய வங்கியின் முற்பணங்களின் பேரில் வெளிநின்ற மொத்தப் பொறுப்பு ரூ. 40,430 இலட்சமாக விளங்கியது. இது 1980 இல் பெறப்பட்ட ரூ. 3,080 இலட்சமும், 1983 இல் பெறப்பட்ட ரூ. 2,770 இலட்சமும் கொண்ட சிறப்புக் கடன்களையும் உள்ளடக்கும். இவ்வாண்டில் மொத்த நிருவாகக் கடன்பாடுகள் ரூ. 40 இலட்சமாகவும், மீளக் கொடுப்பனவுகள் ரூ. 960 இலட்சமாகவும் விளங்கின.

1984 முடிவில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ரூ. 536,810 இலட்சமாக விளங்கி, முந்திய ஆண்டில் ஏற்பட்ட 33 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 17 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. செலாவணி வீதங்களில் ஏற்பட்ட தளம்பல்கள் 1984 இல் வெளிநின்ற பொறுப்புக்களை ரூ. 3,240 இலட்சத்தினல் உயர்த்தின.

அட்டவணை 1.44 இல் காட்டப்பட்டவாறு வெளிநாட்டுக் கடன்களின் மொத்த வரவுகள் 1984 இல் ரூ. 88,380 இலட்சமாக விளங்கின. இது முந்திய ஆண்டின் ரூ. 73,640 இலட்சத்துடன் ஒப்பிடத்தக்கது. யூரோ நாணய வர்த்தகக் கடனின் இறுதி வழங்கலின் பெறுகையான ரூ. 8,800 இலட்சம் 1984 இன் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை.

1984 இல் பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் உள்நாட்டுப் படுகடன் மீதான ரூ. 58,030 இலட்சத்தினையும் வெளிநாட்டுப் படுகடன் மீதான ரூ. 14,930 இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தது. உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1983 இல் ஏற்பட்ட 27 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 9 சதவீதத்தால் அதிகரித்தன. வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டி முந்திய ஆண்டின் 40 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 17 சதவீதத்தால் அதிகரித்தது. உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டி ரூபாக் கடன்கள் மீதான ரூ. 38,920 இலட்சத்தினையும், திறைசேரி உண்டியல்கள் மீதான ரூ. 19,080 இலட்சத்தினையும், நிருவாகக் கடன்பாடுகள் மீதான ரூ. 30 இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தன. வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் செயற்றிட்டக் கடன்கள் மீதான ரூ. 4,330 இலட்சத்தினையும், பண்டக் கடன்கள் ரூ. 4,900 இலட்சத்தினையும், ஏனைய கடன்கள் மீதான ரூ. 5,700 இலட்சத்தினையும் உள்ளடக்கும். ஏனைய கடன்களின்

## வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

கீழ் யூரோ நாணய வர்த்தகக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1983 இன் ரூ. 4,970 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 5,140 இலட்சமாக அமைந்தன.

அட்டவணை 1.44

**வெளிநாட்டுக் கடன்களின் முக்கிய மூலங்கள்-1984**

ப. இ. ரூபாய்களில்

| மூலங்கள் | செயற்திட்டக் கடன்கள் | பண்டக் கடன்கள் | ஏனைய கடன்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி ... | 875.5 | — | — | 875.5 |
| கனடா ... | 260.6 | — | — | 260.6 |
| யூரோ நாணயம் ... | — | — | 880.3 | 880.3 |
| பிரான்சு ... | 146.4 | 73.1 | — | 219.5 |
| சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசு ... | 783.0 | 89.3 | — | 872.3 |
| பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு ... | 2,034.1 | — | — | 2,034.1 |
| யப்பான் ... | 608.5 | 255.6 | — | 864.1 |
| மனுவக்சரர்ஸ் ஹனோவர் றஸ்ற் கொம்பனி ... | 415.6 | — | — | 415.6 |
| சவூதி அரேபிய நிதியம் ... | 195.4 | — | — | 195.4 |
| ஸ்கண்டினேவிஸ்கா என்ஸ்கில்டா பன்கன்ஸ்–சுவீடன் ... | 295.0 | — | — | 295.0 |
| ஐக்கிய அமெரிக்க நாடுகள் ... | 870.7 | 667.3 | — | 1,538.0 |
| ஏனையவை ... | 292.3 | 95.1 | — | 387.4 |
| மொத்தவரவுகள் ... | 6,777.1 | 1,180.4 | 880.3 | 8,837.8 |
| கழிக்க: மீளக்கொடுப்பனவுகள் ... | 276.5 | 551.0 | 637.8 | 1,465.3 |
| தேறிய வரவுகள் ... | 6,500.6 | 629.4 | 242.5 | 7,372.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பணமும் வங்கித் தொழிலும்

### பண நிரம்பல்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், பண, கொடுகடன் கூட்டுக்களில் ஏற்பட்ட அதிகளவான வீழ்ச்சியே 1984 ஆம் ஆண்டில் நாணயத் துறையில் அவதானிக்கப்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க விடயமாகும். பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தையும் கேள்வி வைப்புக்களையும் கொண்டுள்ள குறுகிய பண நிரம்பல் ($M_1$) 1983 இன் ரூ. 29,880 இலட்சம் (25 சதவீதம்) கொண்ட அதிகளவு உயர்வான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ரூ. 20,760 இலட்சத்தால் (14 சதவீதம்) அதிகரித்தது. வர்த்தக வங்கிகள் வசமுள்ள தனியார் துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்களைக் கொண்டுள்ள போலி நாணயம் 1983 இன் ரூ. 37,590 இலட்ச (20 சதவீதம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 40,950 இலட்சத்தால் (18 சதவீதம்) அதிகரித்தது. இதன் விளைவாக $M_1$ ஐயும் போலி நாணயத்தையும் கொண்ட விரிந்த பணம் ($M_2$) முன்னைய ஆண்டின் ரூ. 67,470 இலட்ச (22 சதவீதம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ரூ. 61,710 இலட்சத்தால் (17 சதவீதம்) அதிகரித்து ரூ. 434,270 இலட்சமாக விளங்கியது.

1984 இல் பணநிரம்பலில் பதிவு செய்யப்பட்ட இவ்வதிகரிப்பு உள்நாட்டு கொடுகடனின் வீழ்ச்சியினதும், வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்களின் (தேறிய) தொடர்ச்சியான அதிகரிப்பினதும் விளைவாகும். அரசிற்கான தேறிய கொடுகடனின் கடுமையான வீழ்ச்சியே உள்நாட்டுக் கொடுகடனின் விரிவாக்க